(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 12.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2010, யூன் 11, வெள்ளிக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0030/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்கு வரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள பயணிகள் கார்கள், வேன்கள், லொறிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் முதலியவற்றின் மொத்த எண்ணிக்கையினையும்,

(ii) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு பிரிவிலுமுள்ள வாகனங்களின் எண்ணிக்கையினை பின்வரும் வாகனப் பிரிவுகளில் அவை பதிவு செய்யப்பட்ட தினத்திலிருந்தும்,

2 வருடங்களுக்குட்பட்டவை,

2 முதல் 5 வருடங்களுக்குட்பட்டவை,

5 முதல் 10 வருடங்களுக்குட்பட்டவை,

10 முதல் 20 வருடங்களுக்குட்பட்டவை மற்றும்

20 வருடங்களுக்கு மேற்பட்டவை

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) அவற்றுக்கான அனுமதிப்பத்திரங்கள் மூலம் அரசாங்கம் அல்லது மாகாண சபைகள் ஈட்டும் மொத்த பணத்தொகையை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், என்?

0064/ '10

2.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு 5 மாதங்களுக்கு முன்னர் தார் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவின், ஹக்பொருவ, அலியொழுஆர கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அலியொழுஆர, நுகேயிலிருந்து ஹக்பொருவ வரையயுள்ள வீதியில் 1 கி.மீ. தூரம் வரை தார் கழன்று போக்கு வரத்துச் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகியுள்ளதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0031/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 10 வருடங்களில் உர மானியம் வழங்குவதற்காக அரசாங்கத்திற்கு ஏற்பட்ட செலவை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கடந்த 04 வருடங்களில்,

(i) உரமானியம் வழங்கப்படும் கமத்தொழில் நோக்கங்கள்,

(ii) மாவட்டமொன்றிற்கு வழங்கப்பட்ட நன்மைகள் மற்றும் தொன்களிலான உரத்தின் அளவு,

(iii) மொத்த உரமும் இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள்,

(iv) அரசாங்கத்தினாலா அல்லது தனியார் துறையினராலா அவை இறக்குமதி செய்யப்பட்டன மற்றும்

(v) பல்வேறு வகை உரங்களினதும் தொன் ஒன்றிற்கான செலவு மற்றும் மொத்தச் செலவு என்பவற்றையும்

வருடாந்த அடிப்படையில் அவர் அறிவிப்பாரா?

(இ) தெங்கு, இறப்பர், தேயிலை மற்றும் மரக்கறிப் பயிர்ச்செய்கையாளருக்கு மேற்படி மானியம் வழங்காமைக்கான காரணங்களை அவர் தெரிவிப்பாரா?

(ஈ) அரசாங்கத்தால் வழங்கப்படுமாயின், மேற்படி பயிர் வகைகளுக்கென வழங்கப்படவுள்ள மாவட்டமொன்றிற்கான மானியம் எவ்வளவென அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0065/ '10

4.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ தெற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள வெலே லிந்த வீதியில் 100 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0032/ '10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கடந்த 05 வருடங்களில் வீதிகள் அபிவிருத்திக்கும், பராமரிப்புக்குமென ஒதுக்கீடு செய்யப்பட்டு உண்மையில் செலவு செய்யப்பட்ட பணத்தொகையை வருடாந்த அடிப்படையில் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பராமரிக்கப்பட்டு வருகின்ற 10 முக்கிய வீதிகளையும், அவற்றிற்கென செலவு செய்யப்பட்ட பணத்தையும் வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(இ) நிர்மாணிக்கப்படவிருக்கும் நெடுஞ்சாலைகள் மற்றும் அதிவேக நெடுஞ்சாலைகள் தொடர்பாக,

(i) பெயர்களையும்,

(ii) மதிப்பிடப்பட்டுள்ள செலவினங்களையும்,

(iii) தொடங்கும் திகதிகளையும் முடிவுறும் திகதிகளையும்,

(iv) ஒப்பந்தக்காரர்களது பெயர்களையும் அவர்கள் கூறிய விலைகளையும்,

(v) நிதியளிக்கும் மூலங்களையும் கடன்களுக்கான வட்டி வீதத்துடன் கூடிய மொத்த செலவினங்களையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0066/ '10

6.

கௌரவ சஜித் பிரேமதாச,— நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இற்றைக்கு ஒரு வருடத்துக்கு முன்னர் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட, அம்பாந்தோட்டை மாவட்டத்திற்குரிய, அங்குணுபகொலபெலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவின், தெபொக்காவ வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள கெரன்கொகுஆர வீதியில் 200 மீற்றர் தூரம் வரை கொங்கிறீட் உடைத்து பாதை சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) நிர்மாணப் பணிக்காக நிதி விடுவிக்கப்படுகின்ற போது, நியமங்களுக்கெற்ப வெலை பூர்த்தி செய்யப்பட்டள்ளதென்ற விதப்புரை, தொழிநுட்ப உத்தியோகத்தரிடமிருந்து பெறப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) மேற்படி வீதிக்கான கொடுப்பனவுகளின் போது விதப்புரைகள் பெற்றுக் கொள்ளப்பட்ட ஏனைய நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இது தொடர்பாக முறையான விசாரணையை நடத்துவதற்கும், குறிப்பிட்ட வீதியைச் சீர்செய்வதற்கும் அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— 2010 யூன் மாதம் 30 ஆம் திகதி புதன்கிழமை, யூலை மாதம் 01 ஆம் திகதி வியாழக்கிழமை, 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, 03 ஆம் திகதி சனிக்கிழமை ஆகிய நாட்கள் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களாகுமாக.

2.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.1),— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணிவரையும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 4.30 மணிவரையும் இருக்குமாக. பி.ப. 3.30 மணிக்கு 7(5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.2 ) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாட்களான 2010 யூன் மாதம் 30 ஆம் திகதி முதல் யூலை மாதம் 02 ஆம் திகதி வரை சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப.9.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 9.00 மணிக்கு 7ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் (5) ஆம் (6) ஆம் பந்திகள் தொழிற்படுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல.3 ) ,— 70 (2) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல் "ஒதுக்கீட்டுச் சட்டமூலம் (2010)" இன் பரிசீலனைக்கென ஒதுக்கப்பட்ட நாளான 2010 யூலை மாதம் 03 ஆம் திகதி சனிக்கிழமை சபை அமர்வு நேரம் மு.ப. 9.00 மணி முதல் பி.ப.6.00 மணிவரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 4 ) ,— 7 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2010.05.04ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் 2010 யூன் மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சபை அமர்வு நாளாக இருக்குமாக.

6.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு (இல. 5),— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2010 யூன் மாதம் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.1/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்தல்,— வினைத்திறமை மிக்கதோர் நிர்வாகத்தை மேற்கொள்ளுமுகமாகவும் தமது அமைச்சர்களது செயற்பாடுகளை விமர்சனரீதியாக ஆய்வு செய்வதற்கு ஏதுவான வகையில் சனாதிபதி மற்றும் பிரதம அமைச்சர் ஆகியோர் அமைச்சரவை அமைச்சுப் பதவிகளை வைத்திருப்பதை தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.2/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஆயுதங்களை பதிவு செய்தல்,— இலங்கையிலுள்ள அனைத்து ஆயுதங்களையும் பதிவுசெய்ய வேண்டுமெனவும் அவ்வாறு பதிவு செய்ததின் பின்னரும் யாரிடமாவது அதிகாரமற்ற ஆயுதங்கள் வைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் குறித்த நபருக்கு எதிராக குற்றவியல் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 20 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.3/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வங்கி அலுவலக நேரத்தை நீடித்தல்,— நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துமுகமாக வங்கி அலுவலக நேரத்தினை 9.00 மணி முதல் 16.00 மணிவரை நீடிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.4/ '10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊடகவியலாளர்களுக்கு அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக் குழுக்கூட்டங்களில் பிரசன்னமாயிருக்க அனுமதியளித்தல்,— அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (COPE) அரசாங்கக் கணக்குக்குழு (PAC) மற்றும் ஆலோசனைக்குழுக் கூட்டங்களில் இதுபோன்ற கலந்துரையாடல்கள் மிக விளைபயனுடையதாகவும் அர்த்தபுஷ்டியுள்ளதாகவும் வெளிப்படையானதுமாக அமைய ஏதுவாக இருக்கும் என்பதால், ஊடகவியலாளர்களுக்கு அதில் பிரசன்னமாயிருக்க அனுமதியளிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.5/ '10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவிகளை அளித்தல்,— சுயதொழிலாக கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு விவசாயக் கடனுதவியாக அதிகபட்ச கடனாக 2,50,000 ரூபாவை 5% குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.6/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப் பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்குதல்,— நாட்டினுள் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் போன்றவற்றின் பாவனை வேகமாக அதிகரித்து வருவதாலும் அவ்வாறான கழிவுப் பொருட்களை பாரதூரமின்றி அகற்றுவதனால் ஏற்படும் பாரியளவு சுற்றாடல் மாசுபடுதல் நிமித்தமும் பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுப்

பொருட்களை அழித்துவிடுவது தொடர்பான பொதுமக்களுக்கு அறிவூட்டுமுகமாக நாடளாவிய ரீதியிலான நிகழ்ச்சித்திட்டமொன்றினை அமுலாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.7/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.8/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல், — பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறுமாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப் பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.9/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போதும் ஒத்திவைக்கும் போதும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.10/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பாடகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.11/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி ( ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.12/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடக வியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.13/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாதாந்த சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.14/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.15/ '10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.16/ '10

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.17/ '10

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.18/ '10

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்று உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்திறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.19/ '10

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தனிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.20/ '10

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

21.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

22.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.23/ '10

23.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வு பணிக்கொடை பெற்றுக்கொள்ளப்படாத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

24.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கை நிர்ணயம் தொடர்பில் தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.25/ '10

25.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலை செய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.26/ '10

26.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்புகளை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப் பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக் கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்துவதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற் காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.27/ '10

27.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளைமேற்கொள்ளும் உள்நாட்டு கைத் தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளு மன்றம் கருதுகின்றது.

பா.28/ '10

28.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.29/ '10

29.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.30/ '10

30.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப் பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக்கொடுப் பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.31/ '10

31.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்களை வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.32/ '10

32.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைககளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர்களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.33/ '10

33.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.34/ '10

34.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில் பேட்டைகளை தாபித்தல்,— புத்தளம் மாவட்டத்தில் கைத்தொழில்களை மேம்படுத்தும் நோக்கிலும் இளைஞர்களுக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் மாவட்டத்தில் பொருத்தமான அமைவிடங்களில் கைத்தொழில் பேட்டைகள் அமைக்கப்படவேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.35/ '10

35.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்முனை நகரத்தில் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்,— திகாமடுல்ல மாவட்டத்தின் இளைஞர்களுக்கு உயர்தரத்திலான வசதிகளை வழங்கும் பொருட்டும் பல்வேறு துறைசார்ந்த விளையாட்டுக்களிலும் அவர்களது திறமைகள், ஆற்றல் என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டும் சர்வதேச விளையாட்டு மைதானமொன்றாக அனைத்து துறைகளிலும் சாத்தங்கேனி பொது விளையாட்டு மைதானம் விருத்திசெய்யப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் கருதுகிறது.

*36.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள், — 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணிகள் மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*37.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம்,— நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்சுமன்) சம்பளம், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 156 (3) உறுப்புரையின் வண்ணம் 2009.01.01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு நடைமுறைக்கு வருமாறு அமைய வேண்டுமென இப் பாராளுமன்றத்தினால் இத்தால் குறித்துரைக்கப்படுகின்றது.

நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமன்) - ரூ. 65,000 /=

மேலும், இந்த மாதாந்த சம்பளத்துள் இதற்கு முன்னர் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வீட்டு வாடகைப் படியும் உள்ளடக்கப்பட்டுள்ளதாதலால், நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஓம்புட்சுமன்) வீட்டு வாடகைப் படியும் அடங்கலாக ரூ. 65,0000/= மாதாந்த சம்பளத்திற்குப் புறம்பாக, 2009.01.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிற படிகளைப் பெறுவதற்கு உரிமை இல்லையெனவும் இந்தப் பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.